**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 143/2018**

**Prosecution PW - 1**

| Name | வளர்மதி | Occupation | |
|---|---|---|---|
| Husband/Father Name | | Caste | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Date | 23.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

**(Accused A1-Ramu, A2- Vairamani A3- Rajammal absent petition filed and allowed.)**

**முதல் விசாரணை –**

நான் மன்னார்குடியில் மீனாட்சி தெருவில் வசித்து வருகின்றேன். வீட்டுவேலை பார்த்து வருகின்றேன். எதிரி1 – ராமு, எதிரி2 – வைரமணி, எதிரி 3– ராஜம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரி 1 ராமுவிற்கு எனது மகள் சிவகாமியை 2011ம் வருடம் திருமணம் செய்து வைத்தேன். மேற்படி திருமணத்திற்கு எனது மகள் சிவகாமிவிற்கு 18 பவுன் நகை மற்றும் பாத்திரங்கள், இதர பொருட்களை சீதமனமாக கொடுத்தோம். எனது மகள் சிவகாமிக்கு 13 வயதில் ஒரு மகன் உள்ளார். எனது மகளுக்கு பிள்ளைப்பேறு நாங்கள்தான் பார்த்தோம் அதற்கான செலவு ரூ.40,000/– இருக்கும் அதை நாங்கள்தான் பார்த்தோம். எதிரி 1 –ராமு திருமண சமயத்தில் சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்தார். என் மகளுக்கு குழந்தை பிறந்ததும், சிங்கப்பூரில் இருந்து வந்து எனது மகளையும், குழந்தையையும் அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார். நான் எனது வேலை நிமித்தமாக சிங்கப்பூருக்கு சென்றுவிட்டேன். எனது மகளை எதிரி ராமு தான் வீடு கட்டுவதற்காக மேலும் பணம் வாங்கி வருவதாக சொல்லி எனது மகளை எங்கள் வீட்டிற்கு அடிக்கடி அனுப்பிவிடுவார். எங்கள் வீட்டிற்கு வரும் சமயங்களிலும் எனது மகளை எதிரி ராமு எங்கள் முன்னிலையில் அடித்து கொடுமைபடுத்தியதால், எதிரி ராமு மீது என் கணவர் வாசுதேவன் மற்றும் என் மகள் சிவகாமியும் மன்னார்குடி அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அங்கு வைத்து எனது மகள் மற்றும் எதிரி ராமு

இருவரையும் சமாதானம் பேரி எதிரி ராமு வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு எனது மகள் என்னிடம் தொலைபேசியில் பேசும்போது பணம் கேட்டு கொடுமைபடுத்துவதாக கூறினார் நான் அவர்கள் கேட்ட ரூ.50,000/– பணத்தை கொடுத்துவிடுவதாக சொன்னேன். 2, 3 நாள்கள் கழித்து எதிரி ராமு சிங்கப்பூரில் இருந்த எனக்கு போனில் உங்களுடைய மகளை கொன்றுவிட்டதாக சொன்னார். நான் உடனே சிங்கப்பூரில் இருந்து எனது வீடான மன்னார்குடிக்கு வந்துவிட்டேன். நான் வருவதற்குள் எனது மகளை மன்னார்குடியில் உள்ள எனது வீட்டிற்கு போஸ்மாட்டம் செய்து கொண்டுவந்துவிட்டார்கள். நான் எனது கணவரிடம் விசாரித்தபோது எனது மகள் சிவகாமி அவரது கணவர் வீட்டில் தூக்குபோட்டு இறந்துவிட்டதாக கூறியதாக சொன்னார். எனது கணவர் எனது மகள் சிவகாமி இறப்பிற்கு அவரது கணவர் ராமு, மாமனார் வைரமணி, மாமியார் ராஜம்மாள் ஆகியோர் எனது மகளிடம் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதால்தான் எனது மகள் இறப்பிற்கு காரணம் என்று பட்டுக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். எனது கணவரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து எனது கணவரின் கையெழுத்தாகும். அந்த புகார் **அதசாஆ1** ஆகும். எனது கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார். எனது பேரன் தற்போது எங்களிடம்தான் வளர்ந்து வருகின்றான்.

**குறுக்குவிசாரணை**

The Junior Counsel for the Accused persons represented that the Senior Counsel has gone to III ADJ Court, Pattukkottai to conduct a case and hence, stated no cross-examination today.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜே.தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 143/2018**

**Prosecution PW - 2**

| | | | |
|---|---|---|---|
| Name | பாஸ்கர் | Occupation | |
| Husband/Father Name | ஞானசுந்தர் | Caste | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |
| Date | 23.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(Accused A1-Ramu, A2- Vairamani A3- Rajammal absent petition filed and allowed.)**

**முதல் விசாரணை –**

நான் மன்னார்குடி தாலுக்காவில் பைங்காநாடு கிராமத்தில் வசித்து விவசாய வேலை பார்த்து வருகின்றேன். அசா1 வளர்மதி எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். எதிரி1–ராமு, எதிரி2–வைரமணி, எதிரி 3 – ராஜம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும். அசா1 வளர்மதியின் மகள் சிவகாமியை நாங்கள் எதிரி ராமுவிற்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். எனது அக்கா வளர்மதி சிங்கப்பூரில் இருந்து எனக்கு போன் செய்து தனது மகள் சிவகாமியை எதிரிகள் வரதட்சனை கேட்டு கொடுமைபடுத்துவதாக சிவகாமி இறந்துபோவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு என்னிடம் சொன்னார். நான் உடனே சிவகாமியின் வீட்டிற்கு சென்று அவரை விசாரித்தபோது தன்னை வரதட்சனை கேட்டு கொடுமைபடுத்துவதாக என்னிடம் கூறினார். எனது அண்ணன் இறந்த துக்கத்திற்கு சிவகாமி வந்து அவர்கள் வீட்டிற்கு போய்விட்டது. அதற்கு இரண்டு நாள்கள் கழித்து என் அக்கா வளர்மதியின் கணவர் வாசுதேவன் எனக்கு போன் செய்து அவரது மகள் சிவகாமி அவரது வீட்டில் இறந்துவிட்டதாகவும், போய் பார்க்கும்படியும் கூறினார். நான் என்னுடன் எனது உறவினர்களை வேனில் அழைத்துக்கொண்டு போனேன். அங்கு எதிரிகள் யாரும் இல்லை. ஊர்க்காரர்கள் மட்டும்தான் இருந்தார்கள். நான் இறந்த சிவகாமியை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பிரேத பரிசோதனை முடித்து எங்கள் அக்கா வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்குவிசாரணை**

The Junior Counsel for the Accused persons represented that the Senior Counsel has gone to III ADJ Court, Pattukkottai to conduct a case and hence, stated no cross-examination today.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜே.தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)